# மணப்பாறை நகராட்சி

**2019- ஆம் ஆண்டு நவம்பர் மாதம் (26.11.2019) 26 – ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 04.00 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| 26.11.2019 | **பொருள் – 1**<br>சொத்துவரியினை 01.04.2018 முதல் சீராய்வு செய்திட வெளியிடப்பட்ட அரசாணை எண் .73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை , நாள்.19.07.2018 மற்றும் அரசாணை எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை , நாள்.26.07.2018 ஆகியவைகளை நிறுத் தி வைத்து, சொத்துவரி சீராய்விற்கு முந்தைய சொத்துவரியினையே வசூலித்திடவும் , சொத்துவரி சீராய்வு குறித்து அரசு செயலாளர் நிதித்துறை அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழுவின் பரிந்துரையின்பேரில் அரசினரால் சொத்துவரி சீராய்வு குறித்து முடிவு செய்யப்படும் என வெளியிடப்பட்ட அரசாணை எண் .150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை, நாள் 19.11.19க்கு மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>.அலுவலகக்குறிப்பு</u>**<br>பதிவு செய்யலாம், மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 20.11.2019-ம் தேதிய சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1-ல் குறிப்பிட்டவாறு சொத்துவரி மண்டலங்கள் பகுப்பாய்வு (Zone Rate) மற்றும் 2017-18-ம் நிதி ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சொத்துவரி மறு அளவீடுகள் (under Assessed and buildings with Changes in Usage) ஆகியவைகளையும் நிறுத்தி வைத்திட தெரிவிக்கப்பட்டுள்ளதையும் பார்வையிட்டு பதிவு செய்யலாம் | **தீர்மான எண்.642 அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| 26.11.2019 | **பொருள் – 2**<br>இந்நகராட்சி ஈப்பு வாகனம் **TN45BZ 7050** தற்சமயம் 2லட்சம் கி.மீட்டருக்கு மேலாக ஓடியுள்ளதால் ஈப்பு வாகனத்தில் ஆயில் சர்வீஸ் மற்றும் பிரேக் சரி செய்யும் பணிகள் மகேந்திரா ஈப்பு வாகன நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மராமத்து நிறுவனமான சிவா ஆட்டோ மொபைல்ஸ்(பி) லிட், திருச்சி நிறுவனம் மூலம் பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.**36,000/-** செலவினம் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>1. அனுமதிக்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டமையினை மன்றம் அங்கீகரிக்கலாம்<br><br>மேற்காணும் செலவினம் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். | **தீர்மான எண்.643 அனுமதிக்கப்பட்டது.** |

**தனி அலுவலர்**
**மணப்பாறை நகராட்சி**